II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 285 of 2020**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 05.11.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Ramamoorthy | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

நான் 2013ம் ஆண்டு அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். ஓய்வு பெறும் போது எனது மாத சம்பளம் ரூ.70 ஆயிரம் ஆகும். அதற்கு நான் வருமான வரி செலுத்த வேண்டும் என்றால் சரிதான். நான் தற்போது ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். சில நிறுவனங்களுக்கு சட்ட ஆலோசகராகவும் இருக்கிறேன். இதற்கு அரசின் முன் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. ரியல் எஸ்டேன் தொழிலில் எனக்கு வருடம் ரூ. 2 லிருந்து 3 லட்சம் வருமானம் வருகிறது. 2018, 2019 ஆம் ஆண்டுகளில் எனது பென்ஷன் மாதம் ரூ.36 ஆயிரம் ஆகும். நான் எனது வருமானத்திற்கு வருமான வரி செலுத்தவேண்டியிருக்கும் என்றால் சரிதான். ஆனால் GPF போன்றவற்றை அதிகப்படுத்தியதால் வருமான வரி செலுத்தவில்லை. வா.சா.ஆ.1 முதல் 4 வரையான கடனுறுதிசீட்டுகளின் அடிப்படையில் ராமலிங்கத்திற்கு நான் கடன் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். கடன் தொகைக்கு வருடம் ரூ.12 சதவீதம் வட்டியாகும். ரூ.27 லட்சம் நான் கடன் கொடுத்திருக்கிறேன். ராமலிங்கம் மீது இது வரை நான் கடன் தொகை கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

ராமலிங்கம் வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் பின்புறத்தில் ரெவின்யு ஸ்டாம்ப் ஒட்டி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் ராமலிங்கத்தை தரப்பினராக சேரக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் பேரில் பணமாகவோ, வங்கி பரிவர்த்தனை மூலமாகவோ ராமலிங்கத்திற்கு கடன் கொடுத்ததாக எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குரை மற்றும் முதல் விசாரணைலோ சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. நான் வேண்டுமென்றே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராமலிங்கத்திற்கும், காலம் சென்ற செல்வத்திற்கும் உள்ள தொடர்பு எனக்கு நேரடியாக தெரியும். செல்வத்தையும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். செல்வத்தின் கையொப்பத்தை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது. ராமலிங்கம் LIC ஏஜன்ட்டாக இருந்து வந்தார். அவருக்கு நிலையான வருமானம் இருக்காது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2018 ல் அவரால் எவ்வளவு வருமானம் ஈட்டியிருக்க முடியும் என்றும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் பேரில் கடன் கொடுக்க ராமலிங்கத்திற்கு தகுதி உள்ளதா என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. சொல்ல முடியும். நான் அவருடைய வருமானத்தை பற்றி எதுவும் தெரியாமலேயே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்வம் உயிருடன் இருந்த போது வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் தொகையை கேட்டதாக எனது அறிவிப்பில் நான்

சொல்லவில்லை என்றால் அதனை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. செல்வம் இறந்த பிறகு அவர் அசலும் வட்டியுமாக தொகை செலுத்த வேண்டும் என்று 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் ராமலிங்கம் கேட்டதாக வா.சா.ஆ.5 ல் நான் சொல்லவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை 7 வது பத்தியில் பிரதிவாதிகள் பணத்தை திருப்பி செலுத்த உறுதியளித்ததாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. செல்வம் இறந்த பிறகு தான் வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் முன் மற்றும் பின் பக்கங்களை எழுதினேன் என்றால் சரிதான். 10.09.2020 பிறகும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் நான் பிரதிவாதிகளை சந்திக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் பிரதிவாதிகள், ராமலிங்கத்திற்கு எவ்வளவு அசல் மற்றும் வட்டி கொடுக்கவேண்டும் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது 3 ம் பிரதிவாதி சேதுராமன் மைனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 அனுப்பும் போதும் அவர் மைனர் என்றால் சரிதான். நான் பிறகு அதை பொருத்து மறு அறிவிப்பு அனுப்பியுள்ளேன். 3 ம் பிரதிவாதி மைனர் என்று தெரிந்தும் வழக்கு தாக்கல் செய்யும் போது அதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. அதற்கு பிறகு தான் 12.04.2022 ல் 1 ம் பிரதிவாதியை 3 ம் பிரதிவாதிக்கு பாதுகாவலராக நியமித்து திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 12.04.2022 ல் கடனுறுதி சீட்டுகள் 3 ம் பிரதவாதியை கட்டப்படுதாது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்குரை சங்கதிகளை படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன். வழக்குரை பத்தி 13 ல் செல்வம் 28.10.2019 ல் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர் 10.10.2019 ல் இறந்துவிட்டதாக எனது வழக்குரையில் 5 வது பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

செல்வம் இறந்த பிறகு கடனுறுதி சீட்டுகள் எனது பார்வையில் தயார் செய்யப்பட்டன என்றால் சரியல்ல. செல்வத்தின் இன்ஷியல் " M " ஆகும். வா.சா.ஆ.3 கடனுறுதி சீட்டில் D.செல்வம் என்று உள்ளது என்றால் சரிதான். கடனுறுதி சீட்டுகள் அனைத்து அவசர கதியில் எனது முன்னிலையில் தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை ராமலிங்கம் பூந்தமல்லியில் வைத்து என்னிடம் ஒப்படைக்காததால் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆள்வரை இல்லை என்றால் சரியல்ல. அவர் பூந்தமல்லியில் தான் கொடுத்தார். அவ்வாறு வா.சா.ஆ. 1 முதல் 4 ல் சொல்லப்படவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை நான் பூர்த்தி செய்ததால் ராமலிங்கம் அந்த கடனுறுதி சீட்டுகளை என்னிடம் ஒப்படைப்பு செய்ய எவ்வித மறுபயனும் நான் கொடுக்கவில்லை என்றும், எனவே நான் முறைப்படி உரிமை படைத்தவராக இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை ராமலிங்கம் நல்லெண்ண அடிப்படையில் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றும் எனவே அவற்றின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை செல்வம் இறந்த பிறகு நான் தயார் செய்துள்ளதால் ராமலிங்கத்திடம் இருந்து அவற்றை பெற்றதாக கூறி பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இறந்த செல்வம் வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் பேரில் எவ்வித தொகையும் ராமலிங்கத்திற்கு கொடுக்க வேண்டிதில்லை என்று தெரிந்தும், நான் இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல்

வியாபாரத்திற்காக செல்வம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் இந்த நீதிமன்றத்தில் நான் வழக்கு தொடர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் பேரில் நான் ராமலிங்கத்திற்கு கடனாக பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் நான் முறைப்படி உரிமையுள்ளவர் என்ற தகுதியின் பேரில் இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.